# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association

பதிவு எண் 237/84

**தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்**

எண். 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.

28441286 / 28440938 பேக்ஸ் : 28443601 e-mail : tngeastatecenter@gmail.com

மாநிலத் தலைவர்
**மு.அன்பரசு**

பொதுச் செயலாளர்
**ஆ.செல்வம்**

மாநில துணைத் தலைவர்கள்
**மொ.ஞானத்தம்பி**
**ஏ.பெரியசாமி**
**இரா.மங்களபாண்டியன்**
**என்.வெங்கடேசன்**
**மு.சீனிவாசன்**
**கோ.பழனியம்மாள்**

மாநிலச் செயலாளர்கள்
**சி.ஆர்.இராஜகுமார்**
**இரா.ந.நம்பிராஜன்**
**சி.எஸ்.கிறிஸ்டோபர்**
**சி.பரமேஸ்வரி**
**உ.சண்முகம்**
**தெ.வாசுகி**

மாநிலப் பொருளாளர்
**மு.பாஸ்கரன்**


கடித எண். 9/2021 நாள்.25.05.2021

பெறுநர்

**வருவாய் கோட்ட அலுவலர்**
அருப்புக்கோட்டை.

மதிப்பிற்குரிய ஐயா,

பொருள் : தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், விருதுநகர் மாவட்ட மைய கட்டிடம் - அனுமதியின்றி திறந்துள்ளது - அத்துமீறி ஆக்கிரமித்துள்ளது - சட்டரீதியான நடவடிக்கை எடுக்கக் கேட்டல் - தொடர்பாக

பார்வை :

1. வருவாய் கோட்ட அலுவலர், அருப்புக்கோட்டை அலுவலக ந.க.எண்.5388/அ/2019, நாள்.7.9.2019
2. வருவாய் கோட்ட அலுவலர், அருப்புக்கோட்டை அவர்களின் முன்னிலையில் நடைபெற்ற சமாதான கூட்ட நடவடிக்கைகள், நாள்.9.9.2019
3. எங்களது சங்க முறையீடு, நாள்.19.10.2020
4. சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை வழக்கு எண்.WP(MD)7892/2021 மற்றும்WMP(MD)6025/2021, நாள்.16.04.2021

*****

வணக்கம்.

பார்வையில் காணும் கடிதத்தின் குறிப்புகளை காண வேண்டுகிறோம்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் விருதுநகர் மாவட்ட மைய சங்கக் கட்டிடம் தொடர்பாக மாநில மையத்தால் அங்கீகரிக்கப்பட்டு, சங்க அமைப்பு விதிகளின்படி தேர்வு செய்யப்பட்டு,

செயல்பட்டு வரும் எங்கள் தரப்பினருக்கும், சங்க அமைப்பு விதிகளை மீறி, சங்க விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்காக, சங்க அமைப்பு விதிகளின்படி மாநில செயற்குழுவில் முறையாக விவாதித்து எடுக்கப்பட்ட முடிவின்படி கலைக்கப்பட்ட மாவட்ட மையத்தின் முன்னாள் நிர்வாகிகளுக்கும் இடையில் விருதுநகர் மாவட்ட மைய சங்க கட்டிடத்தை பயன்படுத்துவதில் ஏற்பட்ட பிரச்சனை தொடர்பாக பார்வை குறிப்பு 1ல் கண்ட தங்களது அலுவலக நடவடிகக்கைகளின்படி இரு தரப்பினரையும் அழைத்து தங்கள் தலைமையில் நடத்தப்பட்ட சமாதான கூட்டத்தில்

**"விருதுநகர் மாவட்டம், விருதுநகர் வட்டம், கோட்டைப்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கட்டிடத்தின் மீது உரிமைக்கோரி வழக்கு நிலுவையில் உள்ளது. மேற்படி வழக்கின் தீர்ப்பு வரும் வரை காவல் துறையினரின் பொருப்பிலேயே கட்டிடம் பாதுகாக்கப்பட வேண்டும்"**

என முடிவெடுக்கப்பட்டு வருவாய் கோட்ட அலுவலர், நேர்முக உதவியாளர்/வட்டாட்சியர், மண்டல துணை வட்டாட்சியர், வருவாய் ஆய்வாளர், சிறப்பு சார்பு ஆய்வாளர்(காவல்துறை) மற்றும் இரு தரப்பினரும் கையொப்பமிட்ட சமாதான கூட்ட நடவடிக்கைகள் தற்போதும் நடைமுறையில் உள்ளது.

**ஆனால் அதனை மீறி எதிர் தரப்பினர் சங்க அலுவலகத்திற்குள் அத்துமீறி, சட்டவிரோதமாக புகுந்து அதில் இருந்த சேர், டேபிள், பீரோ, கம்ப்யூட்டர், அனைத்து துறைவாரி சங்கங்களின் முக்கிய ஆவணங்களை எடுத்து சென்றுவிட்டனர் என்பதை தெரிவித்து பார்வை குறிப்பு-2ல் கண்ட எங்களது முறையீட்டில் தெரிவித்திருந்தோம்.**

தற்போது பார்வை குறிப்பு-3ல் கண்ட சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் இந்த சங்க கட்டிடம் சம்பந்தமில்லாத பதிவுத்துறை தலைவர், சென்னை அவர்களால் அனுப்பப்பட்ட கடிதத்தின் பேரில் வழக்கு தொடர்ந்துள்ளனர். இந்த வழக்கில் விருதுநகர் மாவட்ட நிர்வாகிகள் பிரதிவாதிகளாக இல்லை என்பதையும், இவ்வழக்கு விருதுநகர் மாவட்ட சங்க கட்டிடம் தொடர்புடையதல்ல என்பதையும் தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.

**இந்நிலையில் மேற்கண்ட வழக்கில் எந்த ஒரு முடிவான உத்தரவும் பிறப்பிக்கப்படாத நிலையில் எதிரிகள் "பதிவு எண்.237/84, M.R.அப்பன் இல்லம்,3/1076-2, முத்துராமலிங்கம் நகர், விருதுநகர்" என்ற முகவரியில் உள்ள சங்ககட்டிடத்தில் 6.5.2021 அன்று அத்துமீறி, சட்டவிரோதமாக ஆக்கிரமித்து கூட்டம் நடத்தியுள்ளார்கள். கூட்டம் நடத்தியதற்கான புகைப்படம், வாட்ஸ்அப் செய்திகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்
எண். 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.
28441286 / 28440938 பேக்ஸ் : 28443601 e-mail : tngeastatecenter@gmail.com

**இது மதிப்புமிக்க உட்கோட்ட நடுவர் ஆகிய தங்களின் உத்தரவினை மீறிய செயல் ஆகும். எனவே, எங்களது சங்க கட்டிடத்திலிருந்து எதிரிகளை வெளியேற்றி ஏற்கனவே சமாதான கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் சங்க கட்டிடம் தொடர்பான வழக்கின் இறுதி உத்தரவு வரும்வரை காவல்துறையினரின் கட்டுப்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும் எனவும், எதிரிகள் மீது இந்திய குற்றவியல் நடைமுறை சட்ட விதிகளின்கீழ் தக்க குற்றவியல் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறோம்.**

தங்கள் நம்பிக்கையுள்ள,

**(மு. அன்பரசு)**
மாநிலத் தலைவர்

**(ஆ. செல்வம்)**
பொதுச்செயலாளர்

இணைப்பு
பார்வை குறிப்புகளில் கண்ட கடித,
நீதிமன்ற உத்தரவு நகல்கள்

நகல்
1. மாவட்ட ஆட்சித் தலைவர், விருதுநகர்
2.வட்டாட்சியர், விருதுநகர்
3.காவல் ஆய்வாளர், காவல் நிலையம், அருப்புக்கோட்டை